# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.351/2022 P.W.8

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்பையா | த-பெ | சண்முகம் பிள்ளை |
| ஊர்: | : | மணச்சை | | |
| வயது: | : | 62/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் நிறுவனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1) நான் தற்சமயம் மணச்சையில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 05.10.2015 அன்று காலை 11.00 மணிக்கு நானும் கருப்பையா என்பவரும் மணச்சையில் உள்ள ரோட்டுக்கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காளிமுத்து என்பவர் சம்பவ சாலையில் சைக்கிளில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார். பின்னால் ஒரு டாடா எஸ் வாகனம் தாறுமாறாக ஓட்டி வந்து காளிமுத்து என்பவர் மீது மோதினார். அதில் அவர் தலைகீழாக கீழே விழுந்துவிட்டார். நானும் கருப்பையா என்பவரும் அவரை பார்த்தபோது அவருக்கு தலையில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. மூக்கு மற்றும் காது ஆகிய பகுதிகளில் இரத்தம் வடிந்தது. பின்னர் இந்த சம்பவத்தை அவரது மகனுக்கு தகவல் தெரிவித்து வர சொன்னோம்.

2) பின்னர் அவரை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக போக்கு வாகனம் ஒன்றின் உதவியுடன் அழைத்து சென்றார்கள். பின்னர் அன்றைய தினம் மாலை 4.00 மணியளவில் அவர் இறந்து விட்டதாக நான் தெரிந்து கொண்டேன். காயம்பட்ட நபர் எங்கள் பக்கத்து ஊரை

சார்ந்த நபர் என்பதாலும் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட விபத்து குறித்து அதிர்ச்சியில் இருந்ததாகவும் மேற்படி டாடா எஸ் வாகனத்தின் ஓட்டுநரை சம்பவ சமயத்தில் நான் பார்க்கவில்லை. வழக்கு குறித்து சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் தற்சமயம் எனக்கு நினைவில் இல்லை.

**குறுக்கு விசாரணை**

**இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.05 17:37:17 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.